மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும், மலைப் பகுதிகளிலும் முழுநேரக் கடைகள், பகுதிநேரக் கடைகள் அமைப்பது, பிரிப்பது குறித்து என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதை அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஒரு கையேடாகவே உணவுத் துறை வழங்கிடும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பெரிய கடைகளைப் பிரிப்பது குறித்தும் அதிலே சேர்த்துவிடுங்கள். இதற்கு மேலும் துணைக் கேள்வி கேட்கப் போகிறீர்களா? மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேஜி. பிரின்ஸ், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. சி. சண்முகவேலு, திரு. அ. பாப்பா சுந்தரம், திரு. கே. உலகநாதன், திரு. கா.கோ. ரமேஷ் எல்லோரும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

96—

சத்துணவுக் கூடம்

***7840—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, பழஞ்சநல்லூர் ஊராட்சி, தேவனபுத்தூர் கிராமத்திற்குச் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில், பழஞ்சநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட, தேவனபுத்தூர் கிராமத்திற்குச் சத்துணவுக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் இக்கட்டடம் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் அகரமாக, அறிவின் சிகரமாக, ஆற்றலின் இருப்பிடமாக, அஞ்சாமையின் உறைவிடமாக, வீரத்தின் விளைநிலமாக, தமிழகத்தின் கலங்கரை விளக்காக விளங்குகிற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேராணைக்கேற்ப, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சத்துணவுக் கட்டடம் கட்டி விரைவில் திறக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள்வாயிலாக நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எங்கே வெளியே போகிறீர்கள்? உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

97—

தரம் உயர்த்துதல்

***3179—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—